**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4416

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.08.2021

Accepted: 20.09.2021

Published: 01.10.2021

Citation:
Murugesan, A. "A Study of the Rajapalayam Regional Jiva Samadhi Temples." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 95–104.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4416

*Corresponding Author:
murulatha1972@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Study of the Rajapalayam Regional Jiva Samadhi Temples

**A. Murugesan**

*PUPS, TNC Alangulam, Doctoral Analyst (Part Time)*

*Ayya Nadar Janaki Ammal College Autonomous, Sivakasi, Tamil Nadu, India*

http://orcid.org/0000-0002-6530-7981

**Abstract -** Birth and death are inevitable in human life. The newborn must die and become one. But no one wants to die Determination of death at birth. But we don't know that. And the environment around itself, Man sees that those born with him also die. At that moment the philosophy of the instability of life strikes him. At that time he gains temporary wisdom. Life is like a bubble that will burst at any moment again thinking that you should not covet anything going into a fake lifestyle. It was during this time that the Siddhars appeared and human beings lived immortal opulence have paved the way. They have received the art of saga and have attained the tomb of life. Virudhunagar District, In the article we will see some temples in the Rajapalayam area.

**Keywords:** Jivasamadhi, Siddhars, Rajapalayam, Sage, Pujas, Rituals, Tamil Nadu.

## References

1. Kanamanjari Sampathkumar. (2016). *Tamilgathu Siddhargalin Samathigal Matrum Jeeva Samathigal*. Chennai, Sri Hindu Publications.
2. Chandrasekaran, C. (2016). *Siddhar Darshanam*. Coimbatore, Vijaya Publishing, Fifth Edition,
3. Selvakumar. TU. (2016). *Pesum Theivamana Siddhargalin Jeeva Samathigal* Chennai, Shankar Pathipagam.
4. Sokkalingam, V. (2014). *Whistleblower: Pirathitai Vizhakam*. Saraswatimagal Library, Thanjavur, Third Edition.

# இராஜபாளையம் வட்டார ஜீவசமாதி கோயில்கள் – ஓர் ஆய்வு

**ஆ. முருகேசன்**
முனைவர் பட்டஆய்வளார் (பகுதிநேரம்)
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாச்சி), சிவகாசி

**ஆய்வுச் சுருக்கம்**
*மனித வாழ்க்கையில் பிறப்பும், இறப்பும் தவிர்க்க முடியாதவை. பிறந்தவன் இறந்து தான் ஆக வேண்டும். ஆனால், இறப்பதற்கு யாருமே விரும்புவதில்லை பிறக்கும் போது இறப்பும் நிர்ணயம் செய்யப்பட்டுவிடுகிறது. ஆனால் அது நமக்குத் தெரிவதில்லை. தன்னைச் சுற்றி இருக்கின்ற சுற்றத்தினரும், உடன் பிறந்தவர்களும் இறந்து போவதை மனிதன் காண்கிறான். அந்தநிமிடம் வாழ்க்கையின் நிலையாமைத் தத்துவம் அவனைக் தாக்குகிறது. அந்தநேரத்தில் அவன் தற்காலிக ஞானம் பெறுகிறான். வாழ்க்கை என்பது நீர் குமிழி போலத்தான் எப்போது வேண்டுமானாலும் உடைந்து போகும் எதற்கும் ஆசைப்படக்கூடாது என்று நினைத்து மறுபடியும் போலியான வாழ்க்கை முறைக்கு சென்று விடுகின்றான். இந்தச் சமயத்தில் தான் சித்தர்கள் தோன்றி மனிதர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ பாதையை வகுத்துள்ளனர். சாகாக் கலையைப் பொற்று ஜீவசமாதி அடைந்துள்ளனர். விருதுநகர் மாவட்டம், இராஜாபாளையம் வட்டாரத்தில் உள்ள சில கோயில்களை இக்கட்டுரையில் காண்போம்.*

***முக்கியச்சொற்கள்:*** *ஜீவசமாதி, சித்தர்கள், ராஜபாளையம், முனிவர், பூஜைகள், சடங்குகள், தமிழ்நாடு*

### ஓம் ஸ்ரீ ராமசாமிசித்தர் ஜீவசமாதி ஒடுக்கம்

ஸ்ரீராமசாமி சித்தரானவர் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டதில் உள்ள எதிர்க்கோட்டை என்ற ஊரில் முத்தையாத்தேவர், முத்தம்மாள் தம்பதியருக்கு புதல்வராகப் பிறந்தார். அவருடன் பிறந்த சகோதரி கருத்தப் புள்ளை. இவருக்குத் திருமண வயதை எட்டியவுடன் விருது நகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சங்கரன் கோயிலுக்கு செல்லும் வழியில் முறம்பு என்ற ஊரில் இருந்து கிழக்குத் திசையில் சுமார் 7 கி.மீ தொலைவில் உள்ள ஊரான வடகரையில் பிறந்த சிவகாமி அம்பாளைத் திருமணம் முடித்தார்.

சித்தர் வேலை சம்மந்தமாக ரங்கூன் சென்றார். சிறிதுகாலம் கழித்து வடகரைவந்து மளிகைக்கடை வைத்தும், அதோடு சித்தவைத்தியத்திற்கு தேவையான மூலிகைப் பொருட்களையும் வியாபாரம் செய்து வந்தார்.

“இவர் ஒரு நாள் திருச்செந்தூர் சென்று முருகனைத் தரிசனம் செய்ய வேண்டும் என எண்ணினார். அன்று அவருக்கு தீராத வயிற்று வலி ஏற்பட்டு எழுந்திருக்க முடியவில்லை. அவரோ முருகனை நினைத்து உன்னைத் தரிசனம் செய்து உன் அருளைப் பெறவேண்டினேனே, இந்த வயிற்று வலியால் எழுந்து உட்கார முடியாமலும், உன்னைத் தரிசனம் செய்யமுடியாமலும் போய்விட்டதே என்று எண்ணி புலம்பினாராம். அன்று இரவு அவரது கனவில் ஒரு பெரியவர் நெற்றியில் விபுதிப் பட்டையுடனும், கழுத்தில் ருத்திராட்சை மாலையுடனும், காவிவேட்டித் துண்டுடன் தோன்றி நீ எதுக்கு இங்கு வர நினைக்கிறாய் நான் வடகரை தேவியாற்றின் தெற்குக் கரையில் எழுந்தருளி வடகரை மக்களுக்கு நோய்,நொடிகள் இல்லாமலும், கஷ்டங்கள் இல்லாதவாறு வளமோடு வாழ அருள்

புரிய எண்ணியுள்ளேன். எனவே, எனக்கு ஒருகோயில் கட்டிமக்கள் வணங்கி வர ஏற்பாடு செய் எனக்கூறி விபுதியை எடுத்து அவரது வயிற்றில் தடவி மறைந்து விட்டார். அதன் பிறகு வயிற்று வலியும்,வேறுவிதமான எந்த வியாதியும் வரவில்லை"[1].

சித்தரானவர் வடகரை ஊரின் மேல் திசையில் சொந்தமான இடத்தில் ஆலயம் அமைத்தும், அந்த ஆலயத்தினுள் செம்பால் செய்யப்பட்ட வேலினை செய்து கருவறையில் வைத்து வணங்கி வந்தாார். கோயிலானது சுமார் மூன்று அரை ஏக்கர் நிலத்தில் உள்ளது. அந்தக் காலி இடத்தில் கிணறு தோண்டி வாழை, மா, கொய்யா, தென்னை போன்ற மரங்களை வைத்து பெரிய சோலையாக ஆக்கினார்.

சித்தரானவர் ரங்கூனிற்கு வேலையாகச் சென்ற பொழுது அங்கு சித்தரைப் போன்று இருவர் ஆன்மீகத்தில் பற்றுதல் கொண்டு நட்புடன்பழகிவந்ததாகவும்,மூவரும்ஆடித் தவசு அன்று ஜீவசமாதி அடைவதாகப் பேசி கொண்டார்களாம். அதே போல் அவருக்கு மனதில் ஜீவசமாதி அடையும் எண்ணமும், அதற்கான நாள் அவரது ஞானதிருஷ்டியில் தெரியவந்ததாக அறியமுடிகிறது. அன்று முதல் தன்னுடைய ஆன்மாவானது திருவடிக்குச் செல்லவேண்டிய நாள் குறித்தும் அதற்குத் தேவையான இடத்தைக் கோயிலின் உட்புறத்தில் மூலஸ்தானத்திற்கு மேல்திசையில் தேர்வுசெய்து குழி தோண்டியும், உட்கார்வதற்கு பீடம் அமைத்தும், மேலும் விபுதி மூட்டைகள், கற்புர மூட்டைகள், மூலிகைப் பொருட்களை சேககரித்து வைத்ததார்.

ஜீவசமாதி அடையும் நாளான ஆடித் தபசு அன்று தன்னுடைய மகள், மகன்கள் மற்றும் உறவினர்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள ஊர் பொதுமக்களையும் அழைப்புவிடுத் திருந்தார். மேலும், திருச்செந்தூர், பழனி மற்றும் முருகன்கோயிலில் உள்ள துறவிகளையும், செகண்டிகளையும், சங்கு சகிதம் வருமாறும் அழைப்புவிடுத்திருந்தார். அவர் அனைவருக்கும் ஆசிவழங்கி, ஜீவசமாதி அடையும் நேரத்தில் யாரும் அழக்கூடாது. எல்லோருமே "அரோகரா", "அரோகரா" என்று முருகனை நினைத்து கோஷமிட்டு தன்னை வழி அனுப்பும் படி கூறினார்.

சித்தர் சமாதி அடையும் நேரம் வந்ததை அறிந்து பீடத்தில் வந்துஅமர்ந்தார். என் தலையில் வெண்ணெய் உருண்டை ஒன்றை வையுங்கள் அது உருகி வழிந்தோடினால் என்னுடைய ஜுவன் இறைவன் திருவடிக்குச் சென்றுவிட்டதாக எண்ணிப் பீடத்தை மூடிவிடுங்கள் என்று கூறி நிஷ்டையில் அமர்ந்தார். மக்கள் அனைவருமே "அரோகரா", அரோகரா" என்ற கோஷத்தை மனத்திற்குள் சொல்லி சித்தரது நிலையில் வைத்துள்ள வெண்ணெய் உருண்டையை கண் இமைக்காமல் பார்த்தவாறு இருந்த மக்களுக்கு வெண்ணெய் உருக ஆரம்பித்தது. பின்பு, அரோகரா சத்தமும், சங்கு, செகண்டி சத்தமும் விண்ணுலகை முட்டியது.

சித்தரது குடும்பத்தார் அவர் சேகரித்து வைத்திருந்த கற்புர மூடைகள், விபுதி மூடைகள், மூலிகைப் பொருட்களை அனைத்தையும் சுற்றிலும் அடுக்கி வைத்து பீடத்தை மூடிவிட்டனர். இவர் ஜீவசமாதி ஆகி சுமார் 70 வருடங்கள் ஆகின்றது. இந்த சமாதி ஆனது 2019 ஆம் ஆண்டில் இராஜபாளையம் வட்டராத்தில் இருந்தது. தற்பொழுது மாவட்டம் பிரிக்கப்படும் பொழுது வெப்பக்கோட்டை வட்டாரத்தில் இந்த வடகரையில் உள்ளது.

ஓம் ஸ்ரீ ராமசாமிசித்தர் ஜீவசமாதி அடைந்து அவருடைய மகன் கோயிலை நிர்வாகித்து வந்தார். முருகன் போட்டோவை

வைத்து ஆவணி மூலத் திருவிழா நடத்தி வந்தார். போட்டோ வந்த அற்புதத்தை கூறும் போது" ஒருநாள் வடகரையில் அக்கஹாரத்தில் அம்புசாமி என்ற பிராமணர் கனவில் முருகன் தோண்றி, சென்னையில் இருந்து கண்ணாடியில் என்னுடைய உருவம் வரைந்து ஒரு ஓவியர் உன்னிடம் கொடுப்பார். அதை நீ ராம சுவாமியிடம் கொடுத்து வணங்கி அதை சப்பரத்தில் வைத்து ஊர்சுற்றி வரச்சொல் எனக்கூறி மறைந்துவிட்டார். அதே போல் அந்த ஓவியர் கனவில் தோன்றி நீ வரைந்து இருக்கும் இந்தப்படத்தினை ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டாரம், வடகரையில் அம்புசாமி என்ற அய்யர் வசம் கொடு எனக் கூறி மறைந்துவிட்டார். அந்த ஓவியர் வரைந்த படத்தை வடகரை வந்து அம்பு சாமியிடம் படத்தினைக் கொடுத்துச் சென்றார். ராமசாமி சித்தரும் அந்தப் படத்தினை வாங்கி பூஜை செய்து ஆவணி மூலத்தன்று ஊர் வீதி வந்து, தேங்காய், பழம் உடைத்து தற்பொழுதும் இந்தத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது"[2].

சித்தர் உறவினர்களால் முருகனுக்கு கும்பகோணம் சுவாமி மலையில் இருந்து உற்சவர் சிலை வடிவமைத்து மாசிமகத்தன்று வீதி உலா வந்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. சித்தர் ஜீவசமாதி ஆன தினமான ஆடித் தபசு அன்று திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

பங்குனி உத்திரத்தன்று திருவிழா மூன்று நாட்கள் விமர்சையாக நடைபெறுகின்றன. மேலும், சித்தர் ஒடுக்கத்தில் வியாழக்கிழமை நெய்தீபம் ஏற்றி தங்கள் குறைகள், நோய்கள் வேதனைகள், குழந்தைகளின் கல்வி மேம்பாடு, படித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என நம்புகின்றனர். பௌர்ணமி, அமாவாசை தினத்தில் புஜைகள் நடைபெறுகின்றது.

சித்தரது கோயிலில் கமண்டல நீரை எடுத்து திடுக் தண்ணீர் தெளித்து, விபூதியை கொடுத்தால் நோய் குணமாகி விடுவதாகவும். சித்தருக்குச் செய்யப்படும் அபிஷேகத் தேனை எடுத்து குழந்தைக்கு நாக்கில் தொட்டு வைத்தாலும் நோய் விலகுகின்றதாகவும் மக்கள் நம்புகின்றனர்.

"சித்தர் முருகனுக்குக் கோயில் கட்டி வழிபட்டு வந்திருந்த காலத்தில் பிளேக் என்னும் கொடிய நோய் பக்கத்து கிராமங்களில் பரவி ஏராளமானவர்கள் மரணமடைந்திருக்கின்றனர். முருகன் சித்தரது கனவில் தோண்றி எனக்குச் சப்பரம் வைத்து ஊர் சுற்றிவந்தால் எந்த ஒரு நோயும் இந்த ஊரை நெருங்காமல் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி மறைந்து விட்டார். பின்பு, சித்தரோ ஆவணி மூலத்தன்று சப்பரம் அமைத்து ஊர் சுற்றி வந்தால் வடகரை கிராமத்தில் கொடிய நோய் நுழையவில்லை. ஆகையால், தான் சித்தர் கோயிலில் ஆவணி மூலத்திருவிழா இன்றும் விமர்சையாக நடந்து கொண்டிருக்கின்றது"[3].

"ஒருதாய் தன் மகனைத் தேள் கொட்டிவிட்டதாகவும், வேதனை தாங்காமல் துடிக்கிறான் என்று சித்தரிடம் கூட்டிவந்தவுடன், சித்தரும் தனது மனைவியை அழைத்து சிறிதளவு புளிகொடுக்குமாறு கூறினார். சித்தரது மனைவி அந்தப் பையனிடம் புளியைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டவுடன் வலி நின்றுவிட்டதாகத் தெரிய வருகின்றது"[4].

"ஒரு பெற்றோர் தன்னுடைய குழந்தை காணாமல் போய்விட்டது என்று கலங்கினர். சித்தரோ வியாழன் தோறும் நெய் விளக்கு ஏற்றிவணங்கி வாருங்கள் குழந்தை கிடைத்து விடும் என்று கூறியதைக் கேட்டு அவர்களும் நெய் விளக்கு ஏற்றிவழிபட்டு வந்தனர்.

5 -ஆவது வாரம் குழந்தை இருக்குமிடம் தகவல் தெரிந்து குழந்தையை மீட்டத்தாக அறிய முடிகிறது”[5].

“குடிப்பழக்கத்திற்கு ஆளான தன்மகன் குடித்துவிட்டு அடிப்பதாகவும், தன்னை துன்புறுத்துவதாகவும் சித்தரது ஒடுக்கத்தில் வந்து வியாழக்கிழமை தோறும் விளக்கு ஏற்றி வழிபட்டுவர குடிபோதையில் இருந்த மகன் மீண்டு நல்லமுறையில் குடும்பத்தைக் கவனிப்பதாகக் கூறி மகிழ்ந்ததாக அறியமுடிகிறது”[6].

“ஒருவருடைய பையனுக்கு வெளிநாடு செல்ல விசா காலதாமதமாகி கொண்டிருந்ததாம். அந்த நேரத்தில் சித்தரை உருகி வேண்டி வழிபட்டாராம். உடனே அடுத்த பத்து நிமிடத்தில் விசா திருவனந்தபுரம் வந்திருக்கின்றது என்றும் உடனே வந்து வாங்கிச் செல்லவும் என்று கைபேசியின் மூலம் தகவல் வந்நதாக மெய்சிலிர்த்து சொன்னார்”[7].

“சைக்கிள் கடை வைத்திருக்கும் ஒருவர் தன்னுடைய அறுவை சிகிச்சைக்காக ரூபாய் இரண்டே கால் லட்சம் தேவைப்படுவதாக கோயில் பூசாரியிடம் வருத்தப்பட்டு கொண்டிருந்த பொழுது, பூசாரி நீங்கள் சித்தர் கோயிலுக்கு வந்து வியாழக்கிழமை அன்று நெய் தீபம் ஏற்றுங்கள் நினைப்பது நடக்கும் என்று கூறியிருக்கின்றார். இவரும் வியாழக்கிழமைதோறும் தொடர்ந்து மூன்று வாரமாக நெய்தீபம் ஏற்றி சித்தரிடம் வேண்டுதலை உருகிகொண்டார். திருவனந்தபுரம் அமிர்தானந்தாமடத்திலிருந்து மருத்துவமனைக்கு நீங்கள் அறுவை சிகிச்சைக்கு ரூ50,000 செலுத்தினால் போதும் என்று சொல்லி கடைசியில் பணமே இல்லாமல் இலவசமாக அறுவை சிகிச்சை நடைபெற்று விட்டதாக சித்தரின் அருளை பற்றிதெரிவித்தார்”[8].

மேலும், சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் தங்களுடைய வேண்டுதலை நிறைவேற்ற சித்தருக்கு வியாழக்கிழமை தோறும் நெய் தீபம் வைத்து வழிபாடு செய்து கொண்டிருக்கின்றார்கள்.

**ஸ்ரீ ஒரு சொல் வாசகர் சுவாமி**

விருதுநகர்மாவட்டம், இராஜபாளையம் வட்டம், இராஜபாளையத்தில் இருந்து TNC ஆலங்குளம் செல்லும் வழியில் சுமார் 8 கி.மீ தூரத்தில் உள்ள அய்யனாபுரத்தின் தென் திசையில் சங்கம்பட்டி கண்மாய்க் கரையில் உள்ளது இக்கோயில் மாவீரன் புலித்தேவன் சங்கரன்கோயில் கட்டி முடித்தபிறகு மீதியுள்ள தூண் கற்களை அனுப்பினார். அந்த தூண் கற்கள் கோயிலின் வெளியே இப்பொழுதும் இருக்கின்றது. இக்கோயிலானது சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகத் தெரிகின்றது.

பாரததேசத்தை வெள்ளையர்கள் ஆண்டபொழுது சுவாமி மக்களுக்கு காட்சி கொடுத்ததாக அறியமுடிகிறது. தற்பொழுது உள்ள சங்கம்பட்டி கண்மாய் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு குடிநீர் தேவைக்காகக் குளமாக வெட்டப்பட்டது. குளமானது வெட்டப்படும் போது ஒருவர் கண்மாயைச் சமப்படுத்திக் கொண்டிருந்த போது பூமியிலிருந்து திடீரென்று இரத்தமானது கொப்பளித்து வருவதைப் பார்த்த அவர் மயங்கி கீழே விழுந்துவிட்டார். உடன் இருந்த பணியாளர்கள் என்ன செய்வது என்று அறியாமல் வேலையை பாதியிலேயே முடித்துவிட்டுச் சென்று விட்டனர். அன்றைய நாள் இரவிலே அய்யனார்புரத்தைச் சேர்ந்த ஒரு பெரியவரின் கனவில் தோன்றி, அந்தக் காலத்தில் புலிகள் தங்கிய இடமாகக் கருதிய சிறிய குளமான புலியருவி குளம் உள்ள இடத்தில் கைக் குழந்தை அழும் சத்தம் கேட்கும். அந்த இடத்தில் இருந்து தென்பகுதி நடந்து வந்தால் யாம் இருக்கும்

இடத்தை உணர்த்துவோம் என்று கூறி மறைந்தார். மறுநாள், அந்தப் பெரியவர் அந்த இடத்திற்குச் சென்றார். ஆனால், அங்கு குழந்தை அழும் சத்தம் ஏதும் கேட்கவில்லை என்பதால் அந்தப் பெரியவர் வீட்டிற்கு திரும்பினாராம். அன்று இரவு சுவாமி கனவில் தோன்றி நோற்று இரவு சொன்ன அதே இடத்தை கூறிவிட்டு மறைந்துவிட்டாராம். பின்பு, மறுநாள் வந்து பார்த்தபோது குழந்தை அழும் சத்தத்தின் மூலம் தாம் இருக்கும் இடத்தினை சுவாமி உணர்த்தினார்.

சுவாமி காட்சி கொடுத்த இடத்தில் தனக்குத் தெரிந்த முறையில் வணங்கிவந்த அந்தப் பெரியவரின் பெயர் ஒருசொல் நாயக்கர் என்றும், அவருடைய 9 ஆவது தலைமுறை இன்றும் அய்யனாபுரத்தில் வசித்து வருகிறார்கள்.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு தாயார் சொல்ல நமது குலதெய்வம் இது தான் என்று இடத்தைச் சொல்ல, அவரும் வந்து பார்த்தபோது புல், பூண்டுகள், செடிகள் முளைத்து பராமரிப்பு இன்றி உள்ளதாக தெரியவருகின்றது. ஆனால், அந்தநபர் தான்செய்யும் பிற வேலைகளுக்கு நடுவே ஓய்வு நேரத்தில் வந்து கோயிலில் பராமரிப்பு வேலைகளைச் செய்து வருகின்றார். வேலையில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட காரணத்தினால் முழு நேரமாக கோயிலின் வளர்ச்சிக்காக பாடுபட்டுக் கொண்டு இருக்கிறார்.

ஒருசொல் வாசகர் சுவாமியை 21 வகையான சமுதாய மக்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கேரளாவில் உள்ள கொல்லம், மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, கடலூர், விழுப்புரம், சென்னை, திருவண்ணாமலை, வேலூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து வழிபட்டு வருகின்றனர். சுமார் 5000 தலைக் கட்டு குடும்பங்கள் உள்ளதாக அறிய முடிகின்றது. திருக்கோயிலில் வழிபாடு செய்யவரும் பக்தர்கள் தங்களுடைய வேண்டுதல்களை ஒரு சொல்லிப் வேண்டுவதால் அந்த ஒரே சொல்லில் கேள்விக்குரிய பதில் கிடைப்பதால் சுவாமி “ஒரு சொல் வாசகர்” என்று அழைக்கப்படுகிறார். இக்கோயிலில் சுவாமி தாடி வைத்தும், காவி உடை உடுத்தியும் அகத்தியர் முனிவரைப் போல காட்சி கொடுப்பதால் இக்கோயில் சித்தர் கோயில் என்று அழைக்கப்படுகின்றது.

ஒரு சொல் வாசகர் கோயிலானது கிழக்கு பார்த்து உள்ளது. இக்கோயிலில் மூலவருக்கு பின்புறம் வலது பக்கம் கண்ணி மூல விநாயகர், லாடசன்னாசி சிலை அமைந்து உள்ளன. மூலவருக்கு நேராக பின்புறமாக ஆதிசங்கர பரமேஸ்வரி, திசபீட மயில் வாகன ஞானவேல் சிலையும் அமைந்துள்ளன. மூலவருக்கு நேர்பார்வையில் நந்தியப் பெருமான் சிலை உள்ளது. மூலவருக்கு வலது தென்பக்கமாக நல்ல தங்காள், இராக்காச்சி அம்மன், பேச்சி அம்மன் சிலையும் உள்ளது. கோயிலின் தலைவாசல் வழி நுழையும் போது கோடீஸ்வர விநாயகர், முத்துக்குமார சாமி, கருப்பசாமி சிலையும் உள்ளன. வெளிப்புறத்தில் சின்னத் தம்பி சிலையும், அய்யனார் குதிரை வாகனத்தின் மீது உள்ள சிலையும், இராகு, கேதுபகவான், சீலக்காரி அம்மன் மற்றும் ராஜாராணி போன்ற சிலை அமைப்புகளும் உள்ளன.

வீரனசாமி என்னும் தெய்வம் கேரளாவில் இருந்து வரும் போது, எதோ ஒரு கோயிலில் ஆடு வெட்டினார்களாம். அந்த வெட்டிய ஆட்டின் தலைமட்டும் பேசிக் கொண்டே இந்த கோயிலின் அருகில் வந்ததாகத் தெரியவருகிறது. ஆகையால் இன்றும் வீரணசுவாமியை தெய்வமாக வணங்கி வருகின்றனர்.

ஒரு சொல் வாசகர் கோயிலானது சுமார் 2 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றிலும் வில்வமரம், நாகலிங்கப்பூ மரம் போன்ற மரங்கள் வைத்து நந்தவனமாக காட்சியளிக்கிறது. பக்தர்கள் வந்து தங்கிச் செல்வதற்காக ஒரு மண்டபம் ஒன்று உள்ளது.

ஒரு சொல் வாசகர் திருக்கோயிலில் பௌர்ணமி, அமாவாசை, பிரதோச பூஜைகளும் நடைபெற்று வருகின்றன. மாசிமாதத்தில் வரும் மகாசிவாராத்திரி அன்று நான்கு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. பரிவாரத் தெய்வங்களுக்கு பலி கொடுக்கப்படும் போது மூலவரான ஒருசொல்வாசகர் சுவாமிக்கு மட்டும் திரையிட்டு பலியிடுவர். சிவராத்திரி அன்று முதல் பூஜை வீரனசு வாமிக்கு வைத்த பிறகு தான் மூலவருக்கு பூஜைகள் நடக்கும். வருடத்திற்கு சில தடவை ஆடு, கோழி பலியிடுவதாக அறிய முடிகின்றது. இக்கோயிலில் உண்டியல் கிடையாது. வரிவசூல் செய்வதும் இல்லை. "சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக இக்கோயிலைபராமரித்து வருகிறேன் என்று பாஸ்கரன் அவர்கள் கூறுவதன் மூலம் அறிய முடிகிறது."[9] ஒரு ஞாயிற்றுகிழமையன்று கோயிலின் உள்ளே வடக்கே பார்த்து சுவாமி தரிசித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு பெரியவர் தோற்றத்தில் அகத்தியரைப் போல இருந்தார். அந்தப் பெரியவர் என்னைப் பார்த்து நீ எப்போது வந்தாய், பையில் எவ்வளவு காசு வைத்திருக்கிறாய் என்று கேட்டார். நானும் உடனே சட்டைப் பையிலிருந்து 5 ரூபாய் நாணயத்தை எடுத்து பெரியவரிடம் கொடுத்த போது, அந்தப் பெரியவரோ இந்த மூலஸ்தானத்தை மூன்று முறை சுற்றி வா என்றதும், நான் 2 ஆவது முறை சுற்றும் போது அந்தப் பெரியவர் இல்லாததைக் கண்டு நான் அதிர்ச்சி அடைந்தும் பயத்துடன் கோயிலை விட்டு வெளியே வந்து வீட்டிற்குச் சென்றுவிட்டேன். மதியமும், இரவும் உணவு உண்ணாமல் குளிர் காய்ச்சலுடன் படுத்து உறங்கிவிட்டேன். அன்று இரவு நடுநிசியில் முதுகில் ஒரு அடி விழுந்தது போல் எனக்குத் தெரிந்தது. எழுந்து பார்த்தபோது கோயிலில் பார்த்த அதே பெரியவர் என் படுக்கையின் அருகே நிற்பதைப் பார்த்தவுடன் பேரானந்தம் அடைந்தேன். பின்பு, அந்தப் பெரியவரோ ஒரு நிமிடம் காட்சிகொடுத்துவிட்டார். அந்தப் பெரியவர் தெய்வமான ஒரு சொல் வாசகர் வந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன்.

கோயில் பற்றி பூசாரி கூறும் போது" நான் 7 வயதிலிருந்து பூஜை செய்து வருகின்றேன். எங்களின் பங்காளிகள் நான்கு பேர்கள். வருடத்திற்கு ஒரு பங்காளி வீதம் பூஜைகள் செய்து வருகின்றோம். சுவாமி நினைத்ததை நடத்திவைப்பார் என்பதை தெரிவித்து, ஐந்து தலை நாகம் போல காட்சி கொடுத்துச் செல்வதாக பூசாரி சண்முகம் கூறுவதன் மூலம் அறிய முடிகிறது."[10]

மேலும் பாக்கியம் என்ற பக்தர் கூறும்போது "மஞ்சள்காமாலைநோயினால்அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். ஒருநாள் கோயிலுக்கு வந்து ஒரு சொல் வாசகரிடம் இறைவா எனக்கு நோயைத் தீர்த்துவிடு இல்லை என்றால் என் உயிரை உன்னுடன் அழைத்துச் சென்று விடு என கண்ணீர் மல்க வேண்டினேன். பின்பு, அந்த நோயானது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து நோய் தீர்ந்துவிட்டது. கோயிலில் திருவிழா நடக்கும் பொழுது என்னால் முடிந்த தொண்டுகளை இறைவனுக்கு செய்து வருகிறேன்"[11]

"ஒருவருக்கு விப்ரோ என்ற கம்பெனியில் இருந்து நேர்முகத் தேர்விற்கு வந்து இருப்பதாகவும் இக்கோயிலுக்கு வந்து

வேண்டிச்சென்ற பிறகு வேலை கிடைத்தும், தற்பொழுது பிரான்சு நாட்டில் வேலை பார்ப்பதாகவும் மாதம் இரண்டு லட்ச ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுகிறார் என்றும், கோயிலுக்கு வேண்டிய திருப்பணிகளை செய்தும், வருடத்திற்கு சிவராத்திரி தினத்தன்று இரண்டு நாட்கள் தங்கிவிட்டு இறைவனை வேண்டிக் கொண்டு செல்வதாக கூறுவதன் மூலமாக அறியமுடிகின்றது."[12]

## ஸ்ரீ சீனியப்ப ஞானியார் ஜீவ சன்னதி திருக்கோயில் ஒடுக்கம்

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரத்தில், சொக்கநாதன்புத்தூரில் உள்ள மேலூர் துரைச்சாமிபுரத்தில் சிவகிரிரோட்டில் வடக்கு நோக்கிய திசையில் இந்த ஒடுக்கமானது உள்ளது.

சொக்கநாதன்புத்தூரின் தெற்கே ஒரு சிவன்கோயில் இருந்ததாகவும், அந்தக் கோயிலின் கோபுரத்தில் இடிவிழுந்து கோயில் சிதலமடைந்ததாகத் தெரிய வருகின்றது. அந்தக் கோயிலின் தெய்வத்தின் பெயர் சொக்கநாதர். எனவே இந்த ஊர் சொக்கநாதன் புத்தூர் என அழைக்கப்படுகிறது. அந்தக் கோயிலுக்குச் சொந்தமானது குளம் தற்பொழுது "அய்யா ஊரணி" என்று அழைக்கப்படுகிறது. அந்த ஊரணி கோடை காலத்தில் தண்ணீர் வற்றிய நிலையில் கோயிலின் தூண்கள் இன்றும் காணப்படுகிறது. "இக்கோயிலில் இருந்த நந்தியை மாட்டு வண்டியில் வைத்துக் கொண்டு செல்லும்போது, மாட்டுவண்டியின் பாரம் தாங்காமல் அச்சு முறிந்து நந்தியானது அந்த இடத்திலேயே தூக்கமுடியாமல் விட்டுச் சென்றுவிட்டனர். அந்த நந்தியானது பல வருடங்களாக பராமரிப்பு இல்லாமல் இருந்து. சிவனை நோக்கித் தவம் மேற்கொண்டதால் "தவநந்தி கண்டேஸ்வரர்" என்ற பெயருடன் திருக்கோயிலானது அழைக்கப்படுகிறது. நிராவி நம்பிராஜ் என்பவரின் முயற்சியால் கட்டி முடிக்கப்பட்டு தற்பொழுது பூஜைகள் நடைபெற்று வருவதாக சாமிநாதன் என்பவர் கூறுவதன் மூலமாக அறியமுடிகிறது."[13]

இக்கோயில் சீனிப்பஞானியார் சுமார் 400 வருடங்களுக்கு முன்பு ஒடுங்கியதாக அறியமுடிகின்றது. ஞானியார் இந்த ஊரிலேயே பிறந்த வணிக வைசியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவர் திருமணம் செய்யவில்லை இவருக்கு ஒரு கை ஊனம் இவருடன் உடன் பிறந்த தம்பி வாலையானந்தன் வாரிசுகள் இன்றும் இவ்வூரில் வசித்து வருகின்றனர். அந்த வாரிசுகள் 14 ஆவது தலைமுறையாகும்.

ஞானியார் சித்தவித்தையும், மருத்துவ முறைகளையும் கையாண்டவர். தற்பொழுது உள்ள கோயிலானது ஞானியார் ஜீவசமாதி இடமான கீரைத்தோட்டத்தில் ஒரு இடத்தைக் குறித்து குழி தோண்டுமாறு சொல்ல, அவர்களும் படுக்கை வசமாக குழி தோண்டினார்களாம். ஞானியாரும் யாரும் அழ வேண்டாம் என்றும், நாற்பது நாட்கள் தொடர்ந்து புஜை செய்துவரவும் என்று கூறி விட்டு ஜீவ சமாதி நிலையை அடைந்ததாக ஞானியாரின் வாரிசான புசாரி பரமசிவன் கூறினார்."[14]

ஞானியார் கோயிலின் இடமானது அவரின் பெயரிலேயே உள்ளது, மண் சுவர் வைத்து ஓட்டு கொட்டகையாக இருந்ததாகவும். பின்புசுமார் 45 வருடங்களுக்கு முன்பு அவருடைய தம்பி வாரிசுகள் பாகப்பிரிவினை செய்த போது வரிவசூல் செய்து தற்பொழுது உள்ள காங்ரீட் கட்டிடம் கட்டியதாக அறிய முடிகின்றது. ஞானியார் ஒடுக்கம் சுமார் 10 செண்ட் அளவுள்ள நிலத்தில் உள்ளது. ஞானியாரின் ஒடுக்கத்தில் தினமும் ஒரு வேளை புஜை நடைபெற்று வருகின்றது. ஆனால், தேதி, நட்சத்திரம் தெரியவில்லை.

சாமியார் ஒரு நாள் கோயிலுக்கு வந்தார். இந்த ஒடுக்கத்தில் இன்னும் உயிரோட்டம் இருக்கின்றது என்றும், இவர் பங்குனி உத்திரத்தன்று ஜீவ சமாதி அடைந்துள்ளார் என்று கோயில் நிர்வாகி மு. கல்யாண சுந்தரம் கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது."[15]

ஒடுக்கத்தில் ஒவ்வொரு மாதமும் அமாவாசை திதியில் அன்னதானமும், பூஜையும் சிறப்பாக நடைபெறும். இக்கோயிலின் வாரிசுகளாக ஒன்பது வீட்டுக்காரர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு அமாவாசை திதி அன்று ஒவ்வொரு குடும்பம் பூஜைக்கு உள்ள செலவை ஏற்றுக் கொள்ளும் சிவராத்திரி, பௌர்ணமி அன்றும் புஜைகள் நடைபெறுகின்றன.

பங்குனி உத்திரத்தன்று வெளியூரில் உள்ள வாரிசுகள் தவறாமல் வந்து கலந்து கொள்வர். அந்த ஊரில் உள்ள மற்ற சமுதாய மக்களும் கோயிலுக்கு வருவர். இக்கோயில் 11 வகையான அபிஷேகம் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தன்று அபிஷேகம் முடிந்நதவுடன் அன்னதானம் நடைபெறும். ஜீவசமாதி ஒடுக்கம் என்பதால் வியாழக்கிழமை அன்று விளக்கு ஏற்றி வைத்து வேண்டிக் கொண்டாள் நினைத்தது நடப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

"ஞானியாரின் வாரிசுகள் அனைவரின் வீட்டிலும் சீனிப்பன் என்று பெயர் வைத்து இன்று வரை அழைத்து வருகிறோம், என்று அவருடைய வாரிசான செந்தில் கூறுவதன் மூலம் தெரிய வருகின்றது."[16]

"தற்பொழுது நாங்கள் இருக்கும் ஊரானது பெரியவனமாக இருந்தது. அந்த நேரத்தில் காட்டிற்குச் செல்லும் மக்களை கடுவாய் புலிஅடித்துக் கொன்றுவிடும். அப்பொழுது இப் பிரச்சனையை ஞானியாரிடம் சொல்ல தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளிலும் கல்தூணை ஊற்றிவைத்து கடுவாய் புலிகளுக்கு வாய்ப்புட்டு போட்டார் எனவும், அந்த நாளில் இருந்து மக்களுக்கு புலிகளால் தொல்லை இல்லையாம். தற்பொழுதும் தெற்குப் பகுதியில் உள்ள பள்ளிக் கூடத் திற்கு அருகில் ஒருகல் தூணும், வணிக வைசிக தெருவின் மேற்குப் பகுதியில் ஒருகல் தூணும், வடக்குத் தெரு விநாயகர் கோயில் அருகில் ஒரு கல்தூணும் இன்றும் இருப்பதாக பாலசுப்பிரமணியன் மூலமாக அறிய முடிகின்றது."[17]

## முடிவுரை

சித்தர்கள் காட்டிய வழிபாட்டு முறையில் மனிதர்கள் சென்றால் சமூகம் நலமாக அமையும். இறைவனை மனித உள்ளத்தில் அன்பு என்ற வடிவில்கண்டு பூஜை செய்யலாம். இறைவன் பெயரால் நடைபெறும் தேவையற்ற சடங்குகள் அறவே நீக்கினால் அன்பு என்ற மூலப்பொருள் மூலமாக இறைவனை அடையலாம் என்று சித்தர்களின் வாயிலாக அறிய முடிகிறது.

## அடிக் குறிப்புகள்:

| | பெயர் | வயது | ஊர் |
|---|---|---|---|
| 1. | கருப்பசாமி | 57 | வடகரை |
| 2. | நிர்வாகிசிவசுவாமி | 55 | வடகரை |
| 3. | சேதுவேல்பாண்டியன் | 30 | வ.உ.சி.நகர் |
| 4. | மாரீஸ்'வரன் | 32 | வடகரை |
| 5. | லட்சுமிஅம்மாள் | 54 | வடகரை |

| | | | |
|---|---|---|---|
| 6. | குருசாமி | 48 | வடகரை |
| 7. | புசாரிஜெயபால் | 58 | இராஜபாளையம் |
| 8. | குருமூர்த்தி | 45 | வ.உ.சி.நகர் |
| 9. | நிர்வாகிபாஸ்கரன் | 65 | இராஜபாளையம் |
| 10. | புசாரிசண்முகம் | 82 | கீழராஜகுலராமன் |
| 11. | பாக்கியம் | 14. | சத்திரப்பட்டி |
| 12 | வைகுண்டமூர்த்தி | 60 | போடி |
| 13 | சாமிநாதன் | 70 | சொக்கநாதன்புத்தூர் |
| 14 | புசாரிபரமசிவன் | 65 | மேலூர்துறைச்சாமிபுரம் |
| 15 | நிர்வாகிகல்யானசுந்தரம் | 42 | மேலூர்துறைச்சாமிபுரம் |
| 16 | செந்தில் | 42 | மேலூர்துறைச்சாமிபுரம் |
| 17 | பாலசுப்பிரமணியன் | 50 | சொக்கநாதன்புத்தூர் |

**துணைநூற் பட்டியல்**

1. கானமஞ்சரி சம்பத்குமார். (2016). *தமிழகத்துச் சித்தர்களின் சமாதிகள் மற்றும் ஜீவ சமாதிகள்.* சென்னை ஸ்ரீஇந்துபப்ளிகேஷன்ஸ், , பதிப்பு
2. சந்திரசேகரன். சீ. (2016). *சித்தர் தரிசனம்,* விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், ஐந்தாம் பதிப்பு,
3. செல்வகுமார். து. (2016). *பேசும் தெய்வமான சித்தர்களின் ஜீவசமாதிகள்* சென்னை, சங்கர் பதிப்பகம்.
4. சொக்கலிங்கம். வீ. (2014). *புலவர் சமாதிலிங்கப் பிரதிட்டைவிளக்கம்.* தஞ்சாவூர், சரசுவதிமகால் நூலகம். மூன்றாம் பதிப்பு.